அரியலூர் மாவட்டத்தில் ரூ.9.51 கோடி மதிப்பில்

# 8 புதிய சாலை மேம்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர்,ஜூலை,16- அரியலூர் மாவட்டம், தா.பழூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஒன்றியங்களில் ரூ.9.51 கோடி மதிப்பீட்டில் 8 புதிய சாலை மேம்பாட்டுப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், தா.பழூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பல்வேறு புதிய சாலை மேம்பாட்டுப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இதன்படி தா.பழூர் ஒன்றியம், நாயகனைப்பிரியாள் ஊராட்சி, கீழமிக்கேல்பட்டியில் நெடுஞ்சாலைத்துறை (கிராம சாலைகள்) ஊராட்சி ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் திட்டத்தின் கீழ் ரூ.464.00 இலட்சம் மதிப்பீட்டில் டி.வி. சாலை கீழமிக்கேல்பட்டி நாயகனைப்பிரியாள் சாலை கி.மீ 0/0 4/6 வரை தரம் உயர்த்துதல் பணியினையும், காரைக்குறிச்சி ஊராட்சி, கீழமிக்கேல்பட்டியில் தமிழ்நாடு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.132.820 இலட்சம் மதிப்பீட்டில் காரைக்குறிச்சி முதல் கீழமிக்கேல்பட்டி சாலை கி.மீ 0/0 2/950 வரை தார்சாலை அமைக்கும் பணயினையும், தா.பழூர் ஊராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.28.340 இலட்சம் மதிப்பீட்டில் தா.பழூர் சிவன் கோவில் தெரு சாலை கி.மீ 0/0 0/600 தார்சாலை அமைக்கும் பணியினையும், இடங்கண்ணி ஊராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.154.480 இலட்சம் மதிப்பீட்டில் இடங்கண்ணி முதல் தென்கச்சிப்பெருமாள்நத்தம் சாலை கி.மீ 0/0 3/770 வரை தார்சாலை அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு விரைவில் முடித்திட சம்பந்தப்பட்ட அலுலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, ஜெயங்கொண்டம் ஒன்றியம் வாணதிரையன்பட்டினம் ஊராட்சியில், தமிழ்நாடு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.30.0460 இலட்சம் மதிப்பீட்டில் வாணதிரையன்பட்டினம் கிழக்கு காலனி சாலை 0/0 0/900 தார்ச் சாலை அமைக்கும் பணியினையும், பிலிச்சுக்குழி ஊராட்சி, ஒக்கநத்தம் கிராமத்தில் தமிழ்நாடு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.60.670 இலட்சம் மதிப்பீட்டில் ஒக்கநத்தம் பறையன்குளம் முதல் தெற்கு கொட்டாத்தெரு சாலை வரை 0/0 1/190 வரை தரம் உயர்த்துதல் பணியினையும், கச்சிப்பெருமாள் ஊராட்சியில் தமிழ்நாடு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.51.700 இலட்சம் மதிப்பீட்டில் கச்சிப்பெருமாள் தெற்கு சாலை 0/0 0/860 தார் சாலை அமைக்கும் பணியினையும், பின்னர், தமிழ்நாடு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.28.660 இலட்சம் மதிப்பீட்டில் கச்சிப்பெருமாள் வடக்கு சாலை 0/0 0/850 தார்ச் சாலை அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்துப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், கோட்டப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராம சாலைகள் திருச்சி) பெ.வடிவேல்,

ஊரக வளர்ச்சி துறை உதவி செயற்பொறியாளர் சண்முகசுந்தரம்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அமிர்தலிங்கம் (வட்டார ஊராட்சி) ,விஸ்வநாதன் (கிராம ஊராட்சி) , உதவி பொறியாளர்

ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் பிரபாகர், உதவி பொறியாளர் ராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அமிர்தலிங்கம், விஸ்வநாதன், செந்தில் குமார், முருகன், ஒன்றிய கழக செயலாளர்கள் (ஜெயங்கொண்டம்) தனசேகர், தா.பழூர் மேற்கு வா. சௌந்தரராஜன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் என்.ஆர். இராமதுரை, சூசைராஜ்,

சுமதி, ஒன்றிய குழு தலைவர் மகாலட்சுமி வீரமணிகண்டன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் இரா. அண்ணாதுரை, முனைவர் முருகானந்தம், ஊராட்சி மன்ற தலைவர்கள் சசிகலா அம்பேத்கர் (சிந்தாமணி), கவிதா விஜயகுமார் (காரைக்குறிச்சி),ராசாராம் (நாயகனைபிரியாள்), கதிர்வேல் (தா.பழூர்), ஆனந்த வள்ளி ஆறுமுகம்

(தென்கச்சி பெருமாள் நத்தம்) கார்த்திகைகுமரன், ராஜா, மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணி நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்




புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அறந்தாங்கியில் மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி துவக்கி வைத்த கருத்தரங்கில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் வாழ்த்துரை வழங்குகின்றார். இந்நிகழ்வுகளில் முனைவர் கோவி.செழியன், வழக்கறிஞர் அருள்மொழி, கோவி.லெனின், கவிச்சுடர் கவிதைப்பித்தன், பரணி இ.ஏ. கார்த்திகேயன், ஞான. இளங்கோவன், ஆர்.வி. செல்வம் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தனித் தமிழ் இயக்கத் தந்தை

# மறைமலை அடிகளாரின் 148ஆவது பிறந்தநாள்!

**க.வை. இராமகிருட்டிணன்**
செயலர்
அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம்
மதுரை



“மறைமலை அடிகள் நாகப்பட்டினம் காடம்பாடி என்ற கிராமத்தில் சொக்கநாதர் - சின்னம்மாள் ஆகியோருக்கு 15.07.1876ல் புதல்வராகப் பிறந்தார். பெற்றோர் அவருக்கு வேதாச்சலம் என்று பெயர் சூட்டி அழைத்தனர்.

நாகப்பட்டினம் வெஸ்லியன் மிஷின் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் பாராட்டும் வகையில் கல்வி பயின்றார். வேதாசலத்திற்கு தமிழ்மேல் ஆர்வம் கொண்டதால் தமிழ்ப்பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவர் வெ.நாராயணசாமி பிள்ளை அவர்களிடம் செந்தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுணர்ந்தார்.

தமிழ், வடமொழி,ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் உள்ள அரிய நூல்களைக் கற்றுத் தேர்ந்தார்.

சைவச் சான்றோராக இறைநெறி பரப்பியதால் ‘சுவாமி வேதாச்சலம்’ என்று அழைக்கப்பட்டார்.

1916ஆம் ஆண்டு ஒரு நாள். தான் வாழ்ந்து வந்த பல்லாவரம் இல்லத் தோட்டத்தில், அருமை மகள் நீலாம்பிகை உடன் இருக்க, சுவாமி வேதாச்சலம் அவர்கள், தன் மகள் நீலாவிடம் திருவருட்பா பாடலைப் பாடச்சொன்னார்.

**பெற்ற தாய் தனை**
**மகன் மறந்தாலும்**
**பெற்ற பிள்ளையை**
**தாய் மறந்தாலும்**
**உற்ற “தேகத்தை”**
**உயிர் மறந்தாலும்**
**உயிரை மேவிய**
**உடல் மறந்தாலும்....**

...மகள் பாடியதைக்

கேட்டதும், சுவாமி வேதாசலம் அவர்களின்

உள்ளத்தில் புதிய எண்ணம் ஊற்றெடுத்தது.

“என்ன நீலா! இப்பாடலில் வரும் தேகம் என்பது வடமொழிச் சொல். அது “யாக்கை” என்ற தனித் தமிழ்ச் சொல்லால் அமைந்திருந்தால், பாடலின் தமிழ்ச் சுவை இன்னும் சிறப்பாக இருக்கும்” என்றார்.

உடனே நீலா.. “ஆம், இனி நாம் தனித் தமிழில் பேசவேண்டும் : எழுத வேண்டும் என்றாள். தந்தையும் ஏற்றுக்கொண்டார்.

முதலில் சுவாமி வேதாசலம் என்ற தன் பெயரை... ‘வேதம்’ என்றால் மறை ‘அசலம்’ என்றால் மலை ‘சுவாமி’ என்றால் அடிகள் தூய தமிழில் “மறைமலை அடிகள்”என்று மாற்றிக் கொண்டார்.

தான் நடத்தி வந்த ‘ஞானசாகரம்’ என்ற இதழின் பெயரை அழகு தமிழில் “அறிவுக் கடல் “ என்று மாற்றினார். அன்றே தனித் தமிழ் இயக்கம் தோன்றியது என்று கூறலாம்.

தான் எழுதிய நூல்களில், ஆற்றிய சொற்பொழிவுகளில் தனித் தமிழைக் கையாண்டார்.

அதன் பயனாக... நமஸ்காரம் ... வணக்கம் ஆனது அக்ராசனர் ... தலைவர் பொக்கிஷதார் .... பொருளாளர் ஜலம் .... தண்ணீர் - சந்தோஷம் .... மகிழ்ச்சி ஆனது

தமிழ்த்தாய், தமிழர்மதம், அறிவுக் கொத்து பண்டைத் தமிழரும் ஆரியமும், சாதி வேற்றுமையும் போலிச் சைவமும், பொருந்திய உணவும் பொருந்தாத உணவும், மக்கள் நூறாண்டு வாழ்வது எப்படி ? போன்ற (60க்கு மேற்பட்ட) சிறந்த நூல்களைத் தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள் படைத்துள்ளார்கள்.

வரலாற்றில் மறைக்கப்பட்ட தமிழன் பெருமையை நிலைநாட்டும் வகையில் தமிழனுக்கு என்று திருவள்ளுவர் தொடராண்டினை 1921ஆம் ஆண்டு உருவாக்கி தமிழ்கூரும் நல்லுலகிற்கு அறிவிக்க பெரும் பங்காற்றிய தமிழறிஞர்களில் முதன்மையானவர் தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள் ஆவார்.

1938 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி திணிக்கப்பட்டபோது தந்தை பெரியாருடன் இணைந்து மறைமலை அடிகள் இந்தி திணிப்பு எதிர்ப்புபோராட்டங்களை தலைமைஏற்றுநடத்தியவர்.

1911 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகம் ஆங்கிலம், வடமொழி சமசுகிருதம் கட்டாய பாடம். தமிழ் மொழி விருப்பப் பாடம் என்று கொண்டு வந்ததைக் கண்டித்து, பதினாறு ஆண்டுகளாக பணியாற்றிய பேராசிரியர் பதவியை தூக்கி எறிந்து விட்டு வெளியேறிய தமிழ்மொழிக் காவலர் மறைமலை அடிகள் ஆவார்.

தமிழ்க் கடல் மறைமலை அடிகள் 1950 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் தன் 75 வயதில் இயற்கை எய்தினார்கள்.

முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள், மறைமலை அடிகளாரின் நூல்களை அரசுடமை ஆக்கி, அவர்தம் மரபுரிமையினருக்கு ரூ. 15 இலட்சம் வழங்கியதுடன் 2007 ஆம் ஆண்டு மறைமலை அடிகளின் அஞ்சல் தலையும் வெளியிடச் செய்து பெருமைப்படுத்தினார்கள்.

மறைமலை அடிகளின் அடியொற்றி தனித் தமிழ் இயக்கத்தை வளர்த்த சான்றோர்களில் முதன்மையானவர் “திராவிட மொழி ஞாயிறு” தேவநேயப் பாவாணர் ஆவார்.

தமிழ்நாட்டில் ஞாலத்தை வென்ற புலமை பெற்ற நால்வரில் (1.தொல்காப்பியர் 2.திருவள்ளுவர் 3.கால்டுவெல் 4.மறைமலை அடிகள்) ஒருவர் தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள் என்று புகழ்ந்துரைத்தவர் தேவநேயப்பாவாணர் ஆவார்.

தமிழ்க் கடல்மறைமலை அடிகள் பிறந்த நாளில் ஒவ்வொரு தமிழனும் தூய தமிழில் பேசிடவும் - எழுதிடவும் உறுதி ஏற்போம்! தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகளாரின் புகழ் நீடு வாழ்க!

# உலகைப் படித்த மேதை!



கொம்புத்தேன் பேச்சல்ல! எளிய பாணி!
கோமளப்பூஞ் சிவப்பல்ல! கருப்பு மேனி!
தும்பைப்பூக் கதராடை! முழங்கா லைப்போய்த்
தொடுகின்ற மழைக்கைகள்! படர்ந்த நெற்றி!
தெம்புக்குத் தெம்பூட்டும் நிமிர்ந்த திண்டோள்!
தேசத்தை நினைந்துருகும் வெளிச்சக் கண்கள்!
கம்பீரத் திருத்தோற்றம்! ஏழை நேசர்!
காலத்தின் அருட்கொடைநம் காம ராசர்!

அருள்மிகுந்தார் இவர்தந்தை குமார சாமி!
அன்புத்தாய் சிவகாமி! இவர்கள் பெற்றுத்
தர, மகிழ்ந்து சிலிர்த்ததுநம் அன்னை பூமி!
தலைவர்களே விருதுகளைப் பெறுவார்! ஆனால்
விருதுநகர் நம்" காம ராச ரையே"
விருதாகப் பெற்றநக ரன்றோ! இந்தப்
பெருமை,புகழ் குலுக்கலிலே கிடைத்த ஒன்றோ?
பேருழைப்புத் தியாகத்தின் பரிசே யன்றோ!

பனையேறும் குடும்பத்தில் பிறந்தார்! ஆனால்
பலர்ஏறி, மேல்உயர ஏணி யானார்!
மனைமக்கள் இவர்வாழ்வில் இல்லை! நாட்டு
மக்களையே கரைசேர்க்கும் தோணி யானார்!
சுனைநீராய் பயன்பட்டுத் தொண்டு செய்தார்!
சுதந்திர நெருப்பில் நெய் யானார்! எள்ளின்
முனையளவும் சுயநலம்பார்த் தாரா? கண்கள்
மூடும்வரை பிறருக்கே வாழ்ந்து போனார்!

படிக்காத மேதை!இவர் போல்உ ணர்ந்து
படித்தவர்கள் யாருமில்லை உலகை! மோகம்
பிடிக்காத வர்!இவர்போல் தேச பக்தி
பிடித்தவர்கள் யாருமில்லை! செல்வம் சேர்க்கத்
துடிக்காத வர்!இவர்போல் விடுத லைக்குத்
துடித்தவர்கள் யாருமில்லை! தேநீர் கூட
குடிக்காத மனிதர்!இவர் போல்க ரைத்துக்
குடித்தவர்கள் அரசியலை, எவரும் இல்லை!

விளைத்தெங்கும் இவர்சொத்து சேர்க்க வில்லை!
வெளிநாட்டில் பணம்போட்டுக் குவிக்க வில்லை!
வளைத்தெங்கும் மாளிகைகள் கட்ட வில்லை
வாடகைக்கே குடியிருந்தார் வாழ்நா ளெல்லாம்!
இளைத்துப்போ னார்!இதயம் வெடித்துப் போனார்
இந்தியா “நெருக்கடியால்" இருண்ட நேரம்
களைத்துப்போ னார்! ஆமாம், “கலைஞர்" கைமேல்
கைவைத்துத் “தாய்நாட்டைக் காப்பாற்" றென்றார்!

பூவைத்து மலர்வளையம் வைத்துக் கண்ணீர்
பொழிந்துவிட்டுச் சிலர்சென்றார்! புகழு டம்பில்
மூவர்ணக் கொடிபோட்டுப் போர்த்தி விட்டு
முடிந்ததுநம் கடமையெனச் சிலபேர் சென்றார்!
தாய்வைத்த இதயத்தைக் கொண்டி ருந்த
தலைவர்நம் கலைஞர்தாம், உண்மை யான
நேயத்தில், கிண்டியிலே காம ராசர்
நினைவிடத்தை உருவாக்கிப் பெருமை சேர்த்தார்!

வரும்தலைவர் போம்தலைவர் நாட்டில் உண்டு!
வாழ்ந்தசுவ டில்லாத தலைவர் உண்டு!
தரும்தலைவர் பெறும்தலைவர் அதிகம் உண்டு!
தலைவர்களில் இந்நாடு வணங்கிப் போற்றும்
“பெருந்தலைவர்" உயர்காம ராசர் அன்றோ!
திரிந்தலைவர் சிலர்தலைவர் ஆவ தற்கே!
தெப்பமெல்லாம் கப்பலென்றால் ஒப்பு வோமா?

ஏழ்மைநிறை குடும்பத்தின் பிள்ளை யாகி
இளம்வயதில் தந்தையினை இழந்து வாடி
ஊழ்வினைஎன் றிருக்காமல், ஓய்வில் லாமல்
உழைத்துயர்ந்து தமிழ்நாட்டின் முதல்வர் ஆகித்
தாழ்வகற்றும் விடுதலைப்போர்க் “கர்ம வீரர்"
தலைவர்களை உருவாக்கும் தலைவர் ஆகி
வாழ்வைஇந்த நாட்டுக்கே அர்ப்ப ணித்து
வருங்காலத் தலைமுறைக்கும் பாடம் ஆனார்!

சொல்லுக்குள் தேமதுரச் சுவையைக் கூட்டிச்
சொக்கவைக்கும் மாமதுரைக் கூடல் மண்ணில்
“கல்விக்கண் திறந்தமகன்" பிறந்த நாளில்
“கலைஞரின் நூற்றாண்டு நூல கத்தை"
வல்லார்நம் “தளபதியார்" திறந்து வைத்து
வரலாற்றில் ஒளிபடைத்தார் இருவ ருக்கும்!
இல்லார்க்கே வாழ்ந்தமகன் காம ராசர்
எப்போதும் வாழ்வார்நம் இதயத் துக்குள்!

**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**

